19.08.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## சும்மா தராது சுரைக்காய் ஏக்கருக்கு 12 டன்




குறைந்த பரப்பில் கூட நன்கு நிரந்தர அமைப்புகள் அமைத்து அதன் மூலம் சுரைக்காயை பலவித மண் வகைகளிலும் வளர்த்து 12 டன் வரை மகசூல் ஒரு ஏக்கரில் பெறலாம் என்றவுடன் செலவு அதிகமாகுமே என்று ஏங்க வேண்டாம். இதற்கு வங்கிகளின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதில் தப்பே இல்லை. சுரைக்காய்க்கு உள்ள சிறப்பே அது ஓராண்டு தாவரமாக, வேகமாக படர்ந்து செல்லும் தன்மை தான். இதனை தரையில் மற்றும் கூரைகளில் கூட படர விடலாம். மாட்டுக் கொட்டகை, பம்ப் ஹவுஸ், சேமிப்பு கூடம் இப்படி எங்கெல்லாம் கொடியை ஏற்ற

முடியுமோ அங்கு கூட பந்தல் இன்றி சமாளித்து சற்று சம்பாதிக்க உதவும். இப்பயிர் வறட்சியை தாங்கி வளரும். சுரைக்காய்க்கு உப்பில்லை என்பது தவறு. அதில் சுண்ணாம்பு சத்து, பாஸ்பரஸ் இரும்பு சத்து, வைட்டமின் பி மற்றும் புரதம் 0.2 சதமும் கொழுப்புச்சத்து 0.1 சதம் கார்போ ஹைட்ரேட் 2.5 சதமும் தாது உப்புக்கள் 0.5 சதம் உள்ளன. சுரைக்காயில் பல ரகங்கள் உள்ளன. கோ.1, அர்கா பஹார், புசா சம்மர், புராலிபிக் நீளம் புசா சம்மர், புராலிக் உருண்டை மெகதூத் மற்றும் பூசா மன்ஞரி முதலியன குறிப்பிடத்தக்கவை.

நேரடியாக விதைப்பதை விட ஒரு ஏக்கருக்கு 1.200 கிலோவை பாலிதீன் பைகளில் நாற்று விட்டு வளர்த்தல் அல்லது குழித்தட்டு முறையில் வளர்த்து நடுதல் நன்று. விதைக்கு முன்பு அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் ஒரு கிலோ விதைக்கு 500 கிராம் என்ற அளவில் ஆறின அரிசிக் கஞ்சியில் கலந்து கலவையில் நன்கு கலக்கி நிழலில் உலர்த்தி பின் விதைக்கலாம். நடவு வயலுக்கு 10 டன் நன்கு மக்கிய தொழுஉரம் அல்லது தரமான மண்புழு உரம் 5 டன் மற்றும் 188 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரம் இடவேண்டும்.

ஏக்கருக்கு அசோஸ்பைரில்லம் (800 கிலோ) 4 பாக்கெட் மற்றும் சூடோமோனாஸ் 5 பாக்கெட் (ஒரு கிலோ) என்ற அளவில் நன்கு மட்கிய தொழு உரத்துடன் 40 கிலோ வேப்பம் பிண்ணாக்கும் சேர்த்து கடைசி உழவிற்கு முன் இடவும். செடிக்கு செடி 2 .5 மீட்டர் வீதம் இடைவெளி,

வரிசைக்கு வரிசை 2 மீட்டர் வீதம் இடைவெளியில் குழிகள் எடுத்து 7-10 நாட்கள் அந்த குழிகள் ஆற விட வேண்டும். ஒருஅடி நீளம், ஒருஅடி அகலம், ஒருஅடி ஆழம் உள்ள இக்குழிகள் தோண்டிட கருவிகள் உள்ளன. குழிக்கு ஒரு நாற்று நட்டால் நன்று. பெண் பூக்கள் தோன்றிட எத்ரல் பயிர் வளர்ச்சி ஊக்கியை 2.5 மிலி எடுத்து அதனை சுத்தமான நீர் 10 லிட்டரில் கலந்து முதல் இரண்டு இலை உருவாகிய பின் முதல் முறையும் பின் வாரம் ஒருமுறை இடைவெளியில் மூன்று முறை தெளிக்கவும். உயர் விளைச்சல் ரகத்துக்கு ஏக்கருக்கு 120 கிலோ தழைச்சத்து 40 கிலோ மணி சத்து, சாம்பல் சத்து 40 கிலோ இட வேண்டும். 30 நாள் கழித்து தழைச்சத்து, சாம்பல் சத்துக்கள் மேலுரமாக இடவும். வண்டுகள் வந்தால் மீதைல் டெமடான் ஒரு மில்லியை 1 லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து தெளிக்கவும். தாமிரம் மற்றும் கந்தகத் தூள்களை தெளிக்கக் கூடாது. மோனோக்ரோட்டா பாஸ் பயன்படுத்தக் கூடாது. மேலும் விபரங்களுக்கு 98420 07125 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.- **டாக்டர் பா.இளங்கோவன் தோட்டக்கலை உதவி இயக்குனர், உடுமலை.**

## பஞ்சகவ்யா தயாரிப்பது எப்படி




இன்று தமிழ்நாட்டு திட்ட கமிஷன் துணைத்தலைவர் சாந்தஷீலா நாயர் முதல் த.நா.விவசாய பல்கலை கழக துணை வேந்தர் டாக்டர் ராமசாமி வரை மட்டுமல்ல, ஸ்பிக் போன்ற இரசாயன உரத் தயாரிப்பாளர்கள் கூட இயற்கை வழி விவசாயம் பற்றி பேசத் தொடங்கி விட்டனர். ஸ்பிக் நிறுவனம் 3 வகை இயற்கை உரங்களை விற்பனைக்கு அனுப்ப தொடங்கி விட்டது.

இந்நிலையில் ""பஞ்சகவ்யா" பற்றி எங்கும் பரபரப்பாக பேசுகின்றனர். பஞ்சகவ்யா என்றால் என்ன? டாக்டர் நம்மாழ்வார் தினம் தினம் பேசினாரே இந்த பஞ்சகவ்யா பற்றி அறிவோம்.

இதை தயாரிக்க மாட்டு சாணம் 3 கிலோ, மாட்டு சிறுநீர் (கோமியம்) - 3லி, பால் - 2லி, தயிர் - 2லி, நாட்டு சர்க்கரை - 1 கிலோ, (கரும்புச்சாறு - 2லி பயன்படுத்தலாம்), வாழைப்பழம்-12, இளநீர்-2லி, ஈஸ்ட்-100கி, கடலை பிண்ணாக்கு- 1 கிலோ.

பிண்ணாக்கை ஊறவைத்து, அனைத்து பொருட்களையும் மண் பானை / வாளியில் கலந்து, துணியால் மூடி நிழலில் வைக்க வேண்டும். தினம் கலக்கி விட்டால் நுண்ணுயிர்கள் பெருகும். இதன் மூலம் 30லி பஞ்சகவ்யா கிடைக்கும். 10 லிட்டர் நீரில் 300மிலி கலந்து தெளிக்கலாம். பயிர்கள் சிறப்பாக வளரும். 6 மாதம் வரை இதை பயன்படுத்தலாம். 1 ஏக்கருக்கு 30லி பஞ்சகவ்யாவுடன் 200லி அமுதக் கரைசல் பாசன நீருடன் கலந்து விடலாம். இதை பயன்படுத்த மண் வளம் கூடும். பூக்கள் அதிகமாகும்.

அதிக லாபம் கிடைக்கும். www.vanagam.com, www.tnau.ac.in இணைய தளத்தை பாருங்கள்.

- **எம்.ஞானசேகர்,விவசாய ஆலோசகர், 93807 55629.**
-

## சின்ன சின்ன செய்திகள்



களர் மண்ணில் வளரக்கூடிய பயிர்கள்: கோ.43 மற்றும் பையூர் ரக நெல், கோ.11, கோ.12, கோ.13 ஆகிய கேழ்வரகு இரகங்கள் அதிக அரை களர் தன்மையைத் தாங்கி வளரக்கூடியவை. கோ.24, கோ.25 ரக சோளம்

பழைய பருத்தி இரகங்கள் (எம்.சி.யு), கோ.5, கோ.6 ரக கம்பு, கோசி.671 ஆகிய கரும்பு ரகங்கள் மிதமான களர் நிலங்களில் நன்றாக வளர்பவை. தவிர சூரியகாந்தி சவுண்டல் (சூபாபுல்), வேலி மசால், குதிரை மசால், வரகு, கொய்யா, இலந்தை, கருவேல், வேலிக்கருவேல், வேம்பு, சவுக்கு ஆகியவையும் களர் தன்மையைத் தாங்கி வளர்கின்றன. பீன்ஸ், நிலக்கடலை, மக்காச்சோளம், மொச்சை, எலுமிச்சை ஆகியவற்றை களர் நிலங்களில் பயிரிடக் கூடாது.

வாழையைத் தாக்கும் காய்ப்பேன்: வாழைக்காய்களை இரண்டு வகையான காய்ப்பேன்கள் தாக்குகின்றன. 1. பூவைத் தாக்கும் பேன், 2. வாழைப்பழத்தோலில் காயம் ஏற்படுத்தும் பேன்.

மிகச்சிறிய காய்களை பூப்பேன் தாக்குகிறது. சிறு காயங்களிலிருந்து சாற்றை உறிஞ்சுவதால் காய்களின் பரப்பில் சிறிய சிவப்புநிற புள்ளிகள் நாளடைவில் வளர்ந்து கறுப்பு நிற புள்ளிகளாக மாறிவிடும். பூ பேன் தாக்கும் ரகங்கள் - பூவன், நேந்திரன், கற்பூரவல்லி இரகங்களிலும், ரஸ்ட் காய்ப்பேன் சபா, மொந்தன், கற்பூரவல்லி, ரஸ்தாளி ஆகிய இரகங்களில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பூ வெளிவந்தவுடன் மாலை நேரத்தில் குளோர்பைரிபாஸ் 20 உஇ மருந்தினை லிட்டருக்கு 2.5மிலி என்ற அளவில் தெளிக்க வேண்டும். இதனை கடைசி சீப்பு வெளிவந்த 2-15 தினங்களுக்குள் தெளித்தல் அவசியம்.

ரஸ்ட் காய்ப்பேன் - காய்களின் மேற்தோலினை சுரண்டி சாற்றை

உறிஞ்சுவதால் மற்றும் முட்டை இடுவதாலும் விரிசல் ஏற்பட்டது போன்ற காய்கள் காணப்படும்.

ஒருங்கிணைந்த கட்டுப்பாடு - வறட்சி நிலையாக குறைத்து போதுமான அளவு நீர்பாய்ச்சுவதால் இலைப்பேனைக் கட்டுப்படுத்தலாம். அனைத்து சீப்புகளும் வெளிவந்த உடனே வாழை ஆண் பூவை வெட்டி விடுதல் அவசியம். அல்லது பவேரிய பேசியானா 3மிலி, 100மிலி நீரில் கலந்து தெளிக்க வேண்டும். மண்ணில் கார்போபியூரான் 20 கிராம் அளவில் மரத்திற்கு கீழ் இட்டு கட்டுப்படுத்தலாம். ஷபாலி புரோபைலீன் பை கொண்டு தாரினை முழுமையாக மூடிவிடலாம். குளோர்பைரிபாஸ் மருந்தினை 1 லிட்டர் நீருக்கு 2.5மிலி அளவில் பூ மற்றும் தாரில் தெளிக்கலாம். அல்லது இமிடா குளோபிரிடு 17.8 உஇ 500மிலி நீரில் கலந்து ஊசி மூலம் வாழை பூ வெளிவரும் தருணத்தில் இட்டு கட்டுப்படுத்தலாம். தகவல் : முனைவர் பா.பத்மநாபன் மற்றும் எம்.எம்.முஸ்தபா, தேசிய வாழை ஆராய்ச்சி மையம், திருச்சி-102. பருத்தியில் ஊடுபயிர் செய்ய இரட்டை வரிசை நடவு முறை : இறவைப்பருத்தியில் வரிசைக்கு வரிசை 2 1/2மீ, செடிக்கு செடி 1 அடி என்ற இடைவெளியில் ஏக்கருக்கு 18 ஆயிரம் செடிகள் வளர்க்கப்படுகின்றன.

மானாவரி பருத்தியில் - வரிசைக்கு வரிசை 1 1/2மீ, செடிக்கு செடி 3/4 அடி என்ற இடைவெளியில் ஏக்கருக்கு 40 ஆயிரம் செடிகள் வளர்க்கப்படுகின்றன.

பருத்தியில் மகசூல் குறைந்திடாமல் ஊடுபயிரில் உபரி வருமானம் பெற உருவாக்கப்பட்ட முறைக்கு இரட்டை வரிசைமுறை எனப்பெயர். அதாவது, இரண்டு வரிசைகளுக்கு இடைப்பட்ட தூரத்தை இரண்டரை அடிக்குப்பதிலாக 2 அடி : 3:2 அடி : 3 அடி என மாற்றி அமைக்க வேண்டும். 3 அடி இடைவெளியில் ஊடுபயிர் செய்திடலாம். இரண்டு அடி இடைவெளியில் நீர்பாய்ச்சிடலாம். மண்ணின் வளத்தைப் பொறுத்தும் இரகத்தினர் தன்மையைப் பொறுத்தும் செடிக்கு செடி விட வேண்டிய இடைவெளியை மாற்றி அமைக்கலாம். இதனால் ஏக்கருக்கு தேவையான 18,000 செடிகளை உருவாக்கலாம். 3 அடி இடைவெளிக்குள் ஊடுபயிர்களை பயிர் செய்து உபரி வருமானம் பெறலாம்.

இறவை பருத்திக்கு வெண்டை, முள்ளங்கி, உளுந்து, காராமணி மற்றும் வாய்க்கால்வரப்பில் சூரியகாந்தி, தினை, மக்காச்சோளம் பயிரிடலாம். மானாவாரி பருத்தியில் - கொத்தமல்லி, சூரியகாந்தி பயிரிடலாம்.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## லால்பாக் மலர் கண்காட்சிரூ.1.6 கோடி கட்டணம் வசூல்

பெங்களூரு:சுதந்திர தினத்தை முன்னிட்டு, லால்பாக்கில் நடத்தப்பட்ட மலர் கண்காட்சிக்கு, இந்தாண்டு, ஆறு லட்சம் பேர் வந்தனர்; நுழைவு கட்டணமாக, 1.6 கோடி ரூபாய் வசூலாயிற்று.

ஆண்டுதோறும் சுதந்திர தினத்தை முன்னிட்டு, லால்பாக்கில் நடத்தப்படும், 10 நாள் மலர் கண்காட்சிக்கு, உள்ளூர் பொதுமக்கள் மட்டுமின்றி, பிற மாநில சுற்றுலா பயணிகளும் வருவர்.

இந்தாண்டு, ஆறு லட்சம் பேர் வந்ததால், நுழைவு டிக்கெட் விற்பனை மூலம், 1.6 கோடி ரூபாய்வசூலாகி உள்ளது.

'சுதந்திர தினத்தன்று மட்டும் ஒரு நாள் வருவாய், 53 லட்சம் ரூபாய்' என, மைசூரு தோட்டக்கலை துறை, லால்பாக் துணைத்தலைவர் கோதண்டராமய்யா கூறினார்.இந்தாண்டு, இளைஞர் வளர்ச்சி திட்டத்தின், ஒய்.டி.பி., தொண்டர்கள், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், லால்பாக் முழுவதும், 'லால்பாக் சுத்தமாக வைத்திருங்கள்' திட்டத்தில், 200க்கும் மேற்பட்ட திடக்கழிவுகள், ஈரக்கழிவுகள் சேகரிப்பு தொட்டிகளைவைத்திருந்தனர்.

கடந்த ஆண்டுகளை போல், குப்பையை கண்டபடி வீசியெறியாமல், பொதுமக்கள், பொறுப்புடன் குப்பை சேகரிப்பு தொட்டிகளில் போட்டதால், 400 கிலோ திடக்கழிவுகளும், 5,000 லிட்டர் ஈரக்கழிவும் நிர்வாக மையங்களுக்கு அனுப்பப்பட்டு, முறைப்படி மறு சுழற்சியாகவும், இயற்கை உரமாகவும் மாற்றப்பட்டது.குப்பையை தரம் பிரிப்பது குறித்து, 60 தொண்டர்கள் பொதுமக்களுக்கு விளக்கமளித்தது பயனுள்ளதாக

இருந்ததாகவும், இந்தாண்டு குப்பை கழிவுகள் சேகரிப்பதில் சிரமம் எதுவும் இல்லை என்றும், ஒய்.டி.பி., அமைப்பினர் கூறினர்.

## உலகின் முதல் 'சோலார் ஏர்போர்ட்' கொச்சி

கொச்சி : கொச்சி விமானநிலைத்தில், கார்கோ காம்ப்ளக்ஸ் அருகே ,45 ஏக்கர் நிலப்பரப்பில் 46,150 சோலார் பேனல்களுடன் கூடிய 12 மெகாவாட் சோலார் பவர் பிளான்ட்டை, கேரள முதல்வர் உம்மண் சாண்டி நேற்று(18-08-15)திறந்து வைத்தார். இதனால், கொச்சி விமான நிலையம் முழுவதும் தற்போது சோலார் மயமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், உலகின் முதல் சோலார் ஏர்போர்ட் என்ற பெருமையை கொச்சி விமான நிலையம் தட்டிச் சென்றது.

## வைகை அணையில்10 லட்சம் மீன்குஞ்சுகள்

ஆண்டிபட்டி:வைகை அணைக்கு ஜூன், ஜூலையில் பவானிசாகர் அணையில் இருந்து நுண்மீன் குஞ்சுகள் கொண்டு வரப்பட்டு, தொட்டிகளில் வளர்க்கப்படும். கட்லா, மிருகாள், ரோகு வகை நுண்குஞ்சுகள் வளர்ந்த பின் (விரலி பரு-வம்) வைகை அணை நீர்த்தேக்கத்தில் விடப்படும்; இவை சில மாதங்களில் வளர்ந்து விடும். பின், மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் பிடிக்கப்பட்டு, அரசு நிர்ணய விலையில் விற்கப்படும்.தற்போது, விரலி பருவத்-தில், 10 லட்சம் மீன் குஞ்சுகளை நீர்த்தேக்க பகுதியில் விடுவதற்கான பணிகள் துவங்கி

உள்ளன. நேற்று ஒரு லட்சத்து, 30 ஆயிரம் குஞ்சுகள் விடப்பட்டன. சில நாட்களில், மீதமுள்ள குஞ்சுகளை விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீன் குஞ்சுகளின் வளர்ச்சிக்காக, சிறிய துளை கொண்ட வலைகள் மூலம், மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது.

**பெரியாறில்கனமழை**

கூடலுார்:பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் அணைக்கு

நீர்வரத்து அதிகரித்து உள்ளது.பெரியாறு அணை நீர்பிடிப்பில் நேற்று முன்தினம் கன மழை பெய்தது. இதனால், அணைக்கு நீர்வரத்து வெகுவாக அதிகரித்து நேற்று காலை நிலவரப்படி 3005 கன அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, நீர்மட்டம் ஒரே நாளில் ஒரு அடி உயர்ந்து 119.10 அடியாக ஆனது. தமிழகப்பகுதிக்கு 700 கன அடி நீர்

திறந்துவிடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 2466 மில்லியன் கன அடி. தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.

**விவசாயத்துறை மானியம்:வங்கி மூலம் வழங்க உத்தரவு**

தேனி:மானியங்களை 'இ.சி.எஸ்'., முறையில் விவசாயிகளின் வங்கி கணக்கு மூலம் வழங்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.விவசாயத்துறை மூலம் அரசு விவசாயிகளுக்கு

இடுபொருட்கள், பூச்சி மருந்துகள் மற்றும் நிதி உதவிகளை வழங்கி வருகிறது. இதுவரை நிதி உதவிகள் விவசாயிகளுக்கு காசோலைகள் மூலம் வழங்கப்பட்டன. இதில் பல முறைகேடுகள் நடந்தன. எனவே இந்த முறைகேடுகளை களையும் வகையில், இனிமேல் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய மானியம் மிக குறைந்த அளவாக இருந்தாலும், அந்த மானியத்தை விவசாயிகளின் வங்கி கணக்கு மூலம், இ.சி.எஸ்., முறையில் கருவூலம் மூலம் வழங்கவேண்டும்.

2015-16 ஆண்டிற்கான அரசு மானியங்களை வங்கி கணக்கு மூலமே வழங்க வேண்டும் எனவிவசாயத்துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

## விருதை மார்க்கெட் கமிட்டியில் விவசாயிகள்...காத்திருப்பு கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் தேவை

விருத்தாசலம்:விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டியில், நெல் விற்பனைக்கு கொண்டு வரும் விவசாயிகள் மூன்று நாட்கள் வரை காத்திருப்பதை தவிர்க்க, கூடுதல் கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பருவமழை பொய்ப்பு, மின் தடை உள்ளிட்ட காரணங்களால் சம்பா, சொர்ணவாரி, குறுவை நெல் சாகுபடி பாதித்ததுடன், பரப்பளவும் குறைந்தது.

கடந்த மே மாதத்தில் பெய்த பரவலான கோடை மழை, தடையில்லா மின்சாரம் போன்றவற்றால் சிதம்பரம், குமராட்சி, குறிஞ்சிப்பாடி, விருத்தாசலம், கம்மாபுரம், ஸ்ரீமுஷ்ணம், வடலூர் பகுதிளில் 87 ஆயிரம் ஏக்கரில் சொர்ணவாரி, குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டது.

அதிகளவில் பயிரிடப்பட்ட குறுகிய கால ரகங்களான அம்பாசமுத்திரம் (16), ஆடுதுறை (43), ஆடுதுறை (37) ஆகியவை கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக அறுவடைப் பணி தீவிரமடைந்துள்ளது.

கடந்த சம்பா பருவத்தைப் போல நோய், பூச்சித் தாக்குதல்களின்றி அதிக மகசூல் கிடைத்துள்ளன. இதனால், விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிக்கு கடந்த இரண்டு வாரங்களாக தினசரி 10 முதல் 15 ஆயிரம் மூட்டை வரை நெல் விற்பனைக்கு வருகின்றன.அதில், தினசரி 8,000 மூட்டைகள் வரையே கொள்முதல் செய்யப்படுகின்றன. தினசரி 5,000 மூட்டைகள் வரை தேக்கமடைகின்றன. இதனால், விவசாயிகள் மூன்று நாட்கள் வரை காத்திருந்து, தாங்கள் கொண்டு வரும் நெல்லை விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.இந்நிலையில், மாவட்டம் முழுவதும் கம்மாபுரம் உட்பட 12 இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. ஆனாலும், மார்க்கெட் கமிட்டிக்கு வரத்து குறையவில்லை.ரேஷன் கடை, பள்ளிகள், மாணவர் விடுதிகள் உள்ளிட்ட அரசு திட்டங்களுக்காக கிலோ 14.10 ரூபாய் வரை கொள்முதல் செயப்படுகிறது. அறுவடையாகும் நெல் முழுவதையும் 12 கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்ய

முடியாத நிலை உள்ளது.இரண்டு ரூபாய் குறைவாக கிலோ நெல் 12.10 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படும் விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டியில் விற்க விவசாயிகள் முன் வந்தாலும், காத்திருந்து அவதியடையும் நிலை உள்ளது.

எனவே, விருத்தாசலம், கம்மாபுரம், ஸ்ரீமுஷ்ணம் உள்ளிட்ட பகுதிகளில் கூடுதல் கொள்முதல் நிலையங்களை திறக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## இடைப்பாடியில் 47 மி.மீ., மழை

சேலம்: சேலம் மாவட்டம், இடைப்பாடியில், நேற்று முன்தினம் அதிகப்பட்சமாக, 47.4 மி.மீ., மழை பதிவானது. கடந்த சில நாட்களாக, சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. சேலத்தில், நேற்று முன்தினம், 12.2 மி.மீ., ஏற்காட்டில், 14.6 மி.மீ., வாழப்பாடியில், 12 மி.மீ., ஆத்தூரில், 13.6 மி.மீ., இடைப்பாடியில், 47.4 மி.மீ., மேட்டூரில், 0.2 மி.மீ., மழை பதிவானது.

## ரூ.50 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 1,315 மூட்டை மஞ்சள், 50 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.ராசிபுரம் அடுத்த, நாமகிரிப்பேட்டை,

வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் மஞ்சளை அறுவடை செய்து ஏலத்திற்கு கொண்டு வந்தனர். இதில், தலா, 65 கிலோ கொண்ட, 1,315 மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதில், விரலி ரகம் மூட்டைக்கு அதிக பட்சம், 8,822க்கும், குறைந்த பட்சம், 6,589 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம், அதிக பட்சம், 7,389க்கும், குறைந்த பட்சம், 5,319 ரூபாய்க்கும் விற்பனையானது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 16 ஆயிரத்து, 800க்கும், குறைந்த பட்சம், 9,009 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று ஒரே நாளில், 1,315 மூட்டை மஞ்சள், 50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## ஆக., 21ல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

நாமக்கல்: "வரும், 21ம் தேதி, விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது' என, நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார். அவர், வெளியிட்ட அறிக்கை: நடப்பு மாதத்துக்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும், 21ம் தேதி, நாமக்கல் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. காலை, 10.30 மணிக்கு நடக்கும்

இக்கூட்டத்தில், விவசாயிகள் கலந்து கொண்டு, விவசாயம் தொடர்பான பல்வேறு தகவல்களை தெரிந்து கொள்ளலாம். மேலும், விவசாயம் தொடர்பான குறைகள் ஏதாவது இருந்தால், அவற்றை தெரிவித்து உரிய நிவாரணம் பெறலாம். பட்டா மாறுதல், பாதை தகராறு உள்ளிட்ட அனைத்து நிலங்கள் தொடர்பான பிரச்னைகளுக்கு, நாளை (ஆக., 20) காலை, 10.30 மணிக்கு, மாவட்ட வருவாய் அலுவலர் சுப்புலட்சுமி தலைமையில், நாமக்கல் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கும் கூட்டத்தில், நிலம் தொடர்பான பிரச்னையை தெரிவித்து பயன்பெறலாம். இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

## குறைந்து வரும் பருவமழையால் சூரியகாந்தி பயிர் சாகுபடி பாதிப்பு

தர்மபுரி: குறைந்து வரும் பருவமழை அளவு மற்றும் போதிய விலையில்லாத காரணங்களால், தர்மபுரி மாவட்டத்தில், சூரியகாந்தி பயிர் சாகுபடி பரப்பளவு குறைந்து வருகிறது.

தர்மபுரி மாவட்டத்தில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை நம்பி மானாவாரியாக சோளம், கம்பி, கேழ்வரகு, சாமை, மரவள்ளி கிழங்கு பருத்தி, துவரை மற்றும் எண்ணெய்வித்து பயிர்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி ஆகியவை அதிகளவில் சாகுபடி செய்து வந்தது. இந்நிலையில், தர்மபுரி மாவட்டத்தில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையின் அளவு தொடர்ந்து குறைந்து கொண்டு வருகிறது. இதனால், மானாவாரி பயிர்கள் சாகுபடி பரப்பளவு கடந்த சில

ஆண்டுகளாக தொடர்ந்து குறைந்து வருகிறது. குறிப்பாக, எண்ணெய் வித்து பயிரான சூரியகாந்தி சாகுபடி, மாவட்டத்தில், குறைந்து வருகிறது. குறிப்பாக, தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உட்பட, பல்வேறு பகுதிகளில், ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்ட வந்தது. அப்போது, சூரியகாந்தி சாகுபடிக்கு பருவமழை கைகொடுத்ததுடன், போதிய விலையும் கிடைத்து வந்தது. இதனால், மானாவாரி விவசாயிகளுக்கு, சூரியகாந்தி சாகுபடி அதிக வருவாயை ஈட்டி கொடுத்து வந்தது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக பருவமழை ஏமாற்றம், போதிய விலையில்லாதது உள்ளிட்ட காரணங்களால், மாவட்டத்தில், சூரியகாந்தி சாகுபடி, 537 ஹெக்டேராக குறைந்தது. இருந்தும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், சூரியகாந்தி சாகுபடி செய்து வந்த, சில விவசாயிகள், தொடர்ந்து, பருவமழை காலங்களில், சூரியகாந்தி சாகுபடியில், ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி, கடந்த சில மாதங்களுக்கு முன், தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சில விவசாயிகள், சூரியகாந்தி சாகுபடியில் ஈடுபட்டனர். போதிய பருவமழையில்லாமல் வாடி வந்த சூரியகாந்தி மலர்கள், கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக, தற்போது, நன்கு வளர துவங்கியுள்ளது. மேலும், சூரியகாந்தி எண்ணெயின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், "சூரியகாந்திக்கு,

அரசு, விலை நிர்ணயம் செய்ய வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ரூ.3.48 லட்சத்தில் கருப்பட்டி ஏலம்**

ஈரோடு: குன்னத்தூரில், கருப்பட்டி, 3.48 லட்சம் ரூபாய்க்கு ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டது. கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட கூட்டுறவு கருப்பட்டி விற்பனை சம்மேளனம், குன்னத்தூரில் இயங்கி வருகிறது. நேற்று முன்தினம் நடந்த கருப்பட்டி ஏலத்தில், தென்னங் கருப்பட்டி, 6,000 கிலோ வரத்தானது. இக்கருப்பட்டி, கிலோ, 58 ரூபாய் வீதம், 3.48 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. பனங்கருப்பட்டி வரத்து இல்லாததால், ஏலம் நடக்கவில்லை. இத்தகவலை விற்பனை சம்மேளன மேலாண்மை இயக்குனர் கமலம், மேலாளர் முருகானந்தம், தலைவர் பொன்னுசாமி ஆகியோர் தெரிவித்தனர்.

**வேளாண் விளை பொருட்கள் ரூ.75 லட்சத்துக்கு விற்பனை**

அந்தியூர்: அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு நேற்று முன்தினம், அத்தாணி, ஆப்பக்கூடல், வெள்ளித்திருப்பூர், கோபி உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்தும், கர்நாடக மாநிலத்தில் இருந்தும், விவசாயிகள் விற்பனைக்காக பருத்தி, தேங்காய், எள் ஆகிய விளை பொருட்களை கொண்டு வந்திருந்தனர். நேற்று, 4,500 பருத்தி

மூட்டைகள் "பிடி' ரகம் விற்பனைக்கு வந்தது. குறைந்த பட்ச விலையாக, ஒரு கிலோ, 40 முதல் அதிகபட்ச விலையாக, 43.65 ரூபாய் வரை ஏலம் கூறப்பட்டு, 67.50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. 17 ஆயிரம் தேங்காய், 5.20 முதல், 11.70 ரூபாய் என, 1.70 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை தேங்காய், 80 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 53.18 முதல், 76.76 ரூபாய் வரை, 75 ஆயிரம் ரூபாய்க்கும், ஏலம் போனது. மேலும், 25 மூட்டை எள் கொண்டு வரப்பட்டு, கறுப்பு ரகம், கிலோ ஒன்றுக்கு, 31.09 முதல், 54.39 ரூபாய் என, ஒரு லட்சம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், 50 மூட்டைகள், 14.29 முதல், 14.79 ரூபாய் வரை, 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது. கடந்த, புதன்கிழமை நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 197 மூட்டை கொண்டு வந்ததில், பச்சைக்காய் கிலோ, 28.30 முதல், 33.16 ரூபாய் வரையும், காய்ந்தது, 50.01 முதல், 58.49 ரூபாய் வரை ஏலம் கூறப்பட்டு, 85 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தம், 75.10 லட்சம் ரூபாய்க்கு வேளாண் பொருட்கள் வர்த்தகம் நடந்தது, என, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

## தரமற்ற விதை நெல் விற்பனை: வேளாண் துறையினர் எச்சரிக்கை

ஈரோடு: தரமற்ற விதை நெல்லை விற்றால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என்று விதை ஆய்வு துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் அண்ணாதுரை வெளியிட்டுள்ள அறிக்கை: ஈரோடு மாவட்ட அனைத்து பாசனத்துக்கும், நெல் சாகுபடிக்கும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. விவசாயிகள், நெல் சாகுபடி ஆயத்த பணியில் ஈடுபட்டு வருகின்றனர். நெல் விதைகளை அதிகளவில் ஸ்டாக் வைத்து, விதை விற்பனையாளர்கள் வினியோகம் செய்கின்றனர். உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்களிடம், ரசீது பெற்று விதைகளை வாங்கி பயன்படுத்த வேண்டும். விதை விற்பனை உரிமம் பெறாமல் விவசாயிகளுக்கு விதை விற்பனை செய்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஈரோடு விதை ஆய்வாளர்கள் உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில், விற்பனை செய்யப்படும் விதைகளின் முளைப்பு திறன் மற்றும் தரத்தை உறுதி செய்ய மாதிரி எடுத்து வருகின்றனர். தரமற்ற விதைகள் இருப்பது தெரிய வந்தால், விற்பனைக்கு தடை விதிக்கப்படும். விதை விற்பனையாளர்கள், தரமான விதைகளையே கொள்முதல் செய்து, வினியோகம் செய்ய வேண்டும். பிற மாநில விதைகளுக்கு படிவம்-2 பெற்று, விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு விதை விற்பனை செய்யும் போது தகுந்த ரசீது வழங்க வேண்டும். ரசீதுகளில், விவசாயிகளின் கையொப்பம் பெற்று வினியோகம் செய்ய வேண்டும். ரசீதுகளில் குவியல் எண், காலாவதி நாள், பயிர், ரகம், நிலை விவரங்கள் குறிப்பிட வேண்டும். விதை சட்டத்தை மீறும் விற்பனையாளர்கள் மீது, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தக்க தண்டனை, நீதிமன்றம் மூலம் வழங்கப்படும்.

நெல் விதைகளை விற்பனை செய்யும் அதே வேளையில், விதை நேர்த்தி செய்வதன் முக்கியத்துவம் பற்றி, விவசாயிகளிடம் எடுத்து கூறி, விதை நேர்த்தி தொடர்பான மருந்துகளையும், வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## காய்கறி மகசூலை அதிகரிக்கும்நுண்ணூட்ட கலவை அறிமுகம்

திண்டுக்கல்: இந்தியாவில் 156 டன் காய்கறி உற்பத்தியாகிறது. உலகளவில் 2 ம் இடத்தில் உள்ளது. சாகுபடி பரப்பு குறைவு, நுண்ணூட்டச்சத்து குறைபாடு போன்றவற்றால் காய்கறி உற்பத்தி குறைந்துள்ளது. நுண்ணூட்டச்சத்து குறைபாட்டை தடுக்க பெங்களூரு இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி கழகம் சிறப்பு நுண்ணூட்ட கலவையை கண்டுபிடித்துள்ளது. இதனை காந்திகிராம வேளாண் அறிவியல் மையம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இவற்றை தக்காளி, முட்டைகோஸ், காலிபிளவர், குடைமிளகாய் பயிர்களுக்கு 5 கிராம், மிளகாய், கத்தரி, வெங்காயத்திற்கு 3 கிராம், பீன்ஸ், தட்டை

பயறு, வெண்டைக்கு 2 கிராம், பீர்க்கு, பாகல், புடலை, தர்பூசணி, சுரைக்காய்க்கு ஒரு கிராம் பயன்படுத்தினால் போதும். அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார் கூறியதாவது: நுண்ணூட்ட கலவையை இலைவழியாக தெளிக்கும்போது அனைத்து நுண்ணூட்ட சத்துகளும் பயிர்களுக்கு

கிடைக்கும். இதனால் மகசூல் அதிகரிக்கும். நடவு செய்த 30 நாட்கள் அல்லது 45 வது நாளில் தெளிக்கலாம். அதன்பின் 15 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கலாம். அவற்றை பூச்சிக்கொல்லி மருந்துடன் சேர்த்து தெளிக்க கூடாது. ஒரு கிலோ ரூ.150 க்கு தருகிறோம், என்றனர்

**இயற்கை பூச்சிக்கொல்லியான வேப்பமுத்து சேகரிப்பை ஊக்குவிக்க வலியுறுத்தல்:தேவை அதிகம் இருந்தும் உற்பத்தியில் பற்றாக்குறை**

ஆண்டிபட்டி:ரசாயனம் இல்லாத இயற்கை உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்புக்கான வேப்ப முத்துக்கள் சேகரிப்பை ஊக்கப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கோடையில் வேப்ப மரங்கள் பூத்துக்குலுங்கும். ஜூனில் துவங்கி செப்டம்பர் வரை அதிகப்படியான காய்கள், பழங்கள் காய்த்துக்குலுங்கும். வேப்பமரத்தின் அனைத்து பாகங்களும் மருத்துவ குணம் கொண்டிருந்தாலும், வேப்பஎண்ணெய், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிப்பில் வேப்பமுத்துக்கள் பயன்படுத்தப்படுகிறது. கிராமப்புறங்களில் இருந்து சேகரிக்கப்பட்டு வரும் வேப்ப முத்துக்களை சில்லரை வியாபாரிகள் வாங்கி, இருப்பில் வைத்து பின் ஆயில் மில்களுக்கு வினியோகம் செய்கின்றனர்.

ஆண்டிபட்டி பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மரங்களில் இருந்து வேப்ப முத்துக்கள் சேகரிக்கப்படுகிறது.சிறுவர்கள், வயதானவர்கள்,

பெண்கள் உட்பட பலரும் முழு, பகுதி நேரமாகவும் வேப்பமுத்துக்கள் சேகரிப்பதன் மூலம் வருவாய் ஈட்டி வருகின்றனர்.வேப்ப முத்துக்களுக்கான தேவை அதிகமாக இருந்தாலும், சேகரிப்பில் உள்ளவர்களுக்கு குறைவான கூலி என்பதால், மொத்த விளைச்சலில் பெருமளவு சேகரிக்கப்படாமல் வீணாகிறது. வேப்ப எண்ணெய் மற்றும் உரம், வேப்பம்புண்ணாக்கு உற்பத்தியாளர்கள் சங்க மாநில தலைவர் கருணாகரன் கூறியதாவது:பல வகை பூச்சிக்கொல்லி மருந்துகள், இயற்கை உரம் வேப்ப முத்துக்களில் இருந்துதான் தயார் செய்யப்படுகிறது. வேப்ப முத்துக்களில் இருந்து தயார் செய்யப்படும் மருந்துகள், உரங்களுக்கு வெளிநாடுகளில்தான் அதிக வரவேற்புள்ளது.

உள்நாட்டில் இதன் முக்கியத்துவத்தை விவசாயிகள் உணரவில்லை. தமிழகத்தில் வேப்ப எண்ணெய் தயாரிப்புக்கு 800 மில்கள் உள்ளன. வேப்ப முத்துக்களுக்கான தேவை கூடுதலாக இருந்தும், வீணாகும் 90 சதவீத வேப்ப முத்துக்களை பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒருங்கிணைப்பு இல்லை. இதனால் வேப்ப எண்ணெய் உற்பத்தியில் பற்றாக்குறையே நிலவுகிறது. வேப்பமுத்துக்களுக்கு கிலோ ரூபாய் 30 வரை விலை கிடைக்கிறது.

வேப்ப முத்துக்களை பகுதி நேரத்தில் சேகரித்தால் கூட சராசரியாக ரூ.100 முதல் 150 வரை வருவாய் ஈட்ட முடியும். இடைத்தரகர்களால் வேப்பமுத்துக்கள் சேகரிக்கும் தொழிலாளர்கள் விலை கிடைக்காமல் பாதிப்படைகின்றனர். அன்னிய செலாவணி ஈட்டித்தரும் வேப்ப

முத்துக்களின் முக்கியத்துவம் குறித்தும், வேப்ப முத்துக்கள் சேகரிப்பை ஊக்கப்படுத்தவும் மத்திய மாநில அரசுகள் விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

**நாவல் பழ அறுவடை தீவிரம்**

திருப்புவனம்: திருப்புவனம் அருகே பூவந்தியில் நாவல் பழ அறுவடை தீவிரமடைந்துள்ளது.ஆடி,ஆனி,ஆவணி மாதங்களில் நாவல் பழ சீசன் களை கட்டும்.ஆடி மாதம் காற்றடிக்கும் சீசன் என்பதால் நாவல் பழங்கள் அதிகளவு விளையும். பூவந்தியில் சுமார் 50 ஏக்கரில் பெங்களூரு வீரிய ஒட்டு ரக நாவல் பழ மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன.வீரிய ரகம் என்பதால் நடவு செய்யப்பட்ட ஒரு வருடம் முடிந்தவுடன் பழ விளைச்சல் தொடங்கி விடும். சீசன் சமயத்தில் தினசரி 5 கிலோ வரையிலும் மற்ற காலங்களில்2 கிலோ வரை நாவல் பழங்கள் பறிக்கலாம். முற்றிலும் இயற்கை உரங்களை பயன்படுத்தி சொட்டு நீர் பாசனம் மூலம் மரங்கள் வளர்க்கப்படுகின்றன.மதுரை,சிவகங்கை,மேலூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தினசரி வியாபாரிகள் வந்து தோட்டத்திலேயே நாவல் பழங்களை வாங்கி சென்று விற்பனை செய்கின்றனர். சாதாரண ரக பழங்கள் அளவில் சற்று சிறியதாக இருக்கும்.

ஒட்டு ரக பழங்கள் சதை பற்றுடன் பெரியதாக இருக்கும்.வெளி மார்க்கெட்டில் கிலோ 200ரூபாய் என விற்பனை செய்யப்படும் இந்த பழங்கள் சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. மருத்துவ

குணமுள்ள இந்த பழங்கள் சீசன் சமயத்தில் மட்டுமே கிடைக்கும்.பூவந்தியில் இருந்து தினசரி மதுரை மார்க்கெட்டிற்கு நாவல் பழங்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

## விவசாயிகள் உரிமை பாதுகாப்பு மாநாடு

வெம்பக்கோட்டை:வெம்பக்கோட்டை ஒன்றிய மார்க்சிஸ்ட் சார்பில் விவசாயிகள் உரிமைகள் பாதுகாப்பு மாநாடு வெம்பக்கோட்டையில் நடந்தது. கணஞ்சாம்பட்டி கிளை செயலாளர் கருப்பசாமி வரவேற்றார். ஒன்றிய குழு உறுப்பினர் முனியசாமி தலைமை வகித்தார். ஒன்றிய குழு உறுப்பினர் முத்தரசு முன்னிலை வகித்தார். மாவட்டக்குழுஉறுப்பினர் மகாலட்சுமி, மாநில குழு உறுப்பினர் சாமுவேல்ராஜ் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் அர்ச்சுனன், மாவட்டசெயற்குழு உறுப்பினர் தேவா, கண்ணன் பேசினர். கண்மாய் மற்றும் ஓடைகளில் உள்ள முல்வேலிகளை அகற்ற வேண்டும், வரத்து கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒன்றியக்குழு உறுப்பினர் பெருமாள்ராஜ் நன்றி கூறினார். ஒன்றிய செயலாளர் சுந்தரபாண்டியன் ஏற்பாடுகளை செய்தார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகத்தில் இன்று மழை வாய்ப்பு**

வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் புதன்கிழமை (ஆக. 19) ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

வெப்பச் சலனம் காரணமாக, கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக தமிழகம், புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழை பெய்தது. குறிப்பாக, சென்னை, புறநகர் பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்து வந்தது.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாக சென்னை, புறநகர் பகுதிகளில் பகல் நேரங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

வெப்பத்தால், அதிக புழுக்கம் நிலவுகிறது. வெப்பச் சலனம் நீடிப்பதால், தமிழகம், புதுச்சேரியில் புதன்கிழமை ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரியாக இருக்கும். அடுத்து வரும் இரண்டு நாள்களுக்கும் தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே மழை பெய்யும் வாய்ப்புள்ளது. குறிப்பாக,

தமிழகத்தின் மலைப் பகுதிகளான கோவை, நீலகிரி ஆகிய இடங்களில் பலத்த மழை பெய்யும். கடந்த 24 மணி நேரத்தில், தேனி மாவட்டம் உத்தமபாளையம், நாமக்கல் மாவட்டம் மங்களாபுரம், நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் தலா 50 மி.மீ., கோவை மாவட்டம் வால்பாறையில் 40 மி.மீ. மழை பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

**நெல் இயந்திர நடவு முறை**

வத்தலகுண்டு குன்னுவாரன்கோட்டை கிராமத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திருந்திய நெல் சாகுபடி முறையில், இயந்திரம் மூலம் நடவுப்பணி துவக்கப்பட்டது.

நடவினை திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சம்பத்குமார் தொடக்கி வைத்தார்.

உதவி இயக்குநர் அ.கோபால்ராஜ், வேளாண் அலுவலர் நாகேந்திரன், உதவி அலுவலர்கள் விமலர், கர்ணன், தர்மர், சசிகுமார், ஷாஜகான் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வைகை அணையில் விடப்பட்ட 1,30,000 மீன் குஞ்சுகள்**

வைகை அணையின் நீர்தேக்கப் பகுதியில் மீன்வளத் துறையினரால் 1,30,000 மீன்குஞ்சுகள் செவ்வாய்க்கிழமை விடப்பட்டுள்ளது.

வைகை அணையில் மீன்வளத்தை அதிகரிக்கும் நோக்கில் மேட்டூர் பகுதியில் இருந்து கட்லா,ரோகு மற்றும் மிருகால், கெண்டை ஆகிய மீன் குஞ்சுகள் வாங்கப்பட்டு வைகை அணையின் மீன்வளத்துறை அலுவலகத்தில் உள்ள ராட்சத தொட்டிகளில் 90 நாள்கள் வளர்க்கப்படுகிறது.வளர்ச்சியடைந்த கட்லா, ரோகு ஆகிய மீன்குஞ்சுகள் வைகை அணை மீன்வளத்துறை ஆய்வாளர் மனுநீதிசோழன், சார்பு-ஆய்வாளர் டி.முருகேசன் மற்றும் மீனவர் கூட்டுறவு சங்கத் தலைவர் வீ.பாண்டி மற்றும் பங்கு மீனவர்கள் முன்னிலையில் வைகை அணையின் நீர்த்தேக்க பகுதியில் செவ்வாய்க்கிழமை விடப்பட்டது. இந்த மீன்குஞ்சுகள் ஆறுமாதங்களில் பிடிப்பதற்கு ஏற்ற வளர்ச்சியடைந்து விடும். அதன்பின் பங்கு மீனவர்கள் மூலம் பிடிக்கப்பட்டு மீன்வளத் துறையின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

**ஆக.21இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆக.21ஆம் தேதி (சனிக்கிழமை) காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு

தங்களது கோரிக்கைகளை தெரிவித்து தீர்வு காணலாம் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

**விருதுநகர் பகுதியில் பரவலான மழை**

விருதுநகர் பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலையில் பரவலான மழை பெய்தது.

விருதுநகர் பகுதியில் கடும் வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில் மாலையில் கருமேகம் சூழ்ந்து மழை பெய்யத் தொடங்கியது. தொடர்ந்து ஒரு மணி நேரம் பெய்த மழையால் வெப்பம் தனிந்தது. ஏற்கனவே இப்பகுதிகளில் உள்ள குந்தலபட்டி, செங்குன்றாபுரம், செங்கோட்டை, பாவாலி, சீனியாபுரம், எரிச்சநத்தம், தாழிக்குளத்துப்பட்டி, சின்னப்பரெட்டிபட்டி, தவசிலிங்காபுரம், மூளிப்பட்டி, கிருஷ்ணப்பநாயக்கன்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் மானாவாரி விளைநிலங்களை உழவு செய்து விதைப்பு பணிகளுக்காக தயார் நிலையில் இருந்து வருகின்றனர்.

எனவே, கடந்த இரண்டு நாள்களாக அவ்வப்போது விட்டு விட்டு பெய்து வரும் சாரல் மழையால் விளைநிலம் குளிர்ந்துள்ளது.

**பவானிசாகரில் ரூ. 50 லட்சத்தில் சமுதாய வானொலி நிலையம்**

பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில், அட்மா திட்டத்தின்கீழ் சமுதாய வானொலி நிலையம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாக ஈரோடு வேளாண்மை துணை இயக்குநர் மாரியப்பன் தெரிவித்துள்ளார்.

கோபியில் விவசாயிகள் - விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது. கோபி, வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி முன்னிலை வகித்தார். ஈரோடு அட்மா திட்ட அலுவலர் ராஜகோபால் வரவேற்றார்.இதில், பங்கேற்ற ஈரோடு வேளாண்மை துணை இயக்குநர் மாரியப்பன் பேசுகையில்,"ஈரோடு மாவட்டத்தில் அட்மா திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஆராய்ச்சி, விரிவாக்கம், விவசாயிகள் ஆகிய 3 முனைகளையும் இணைத்து, நவீன தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்த இத்திட்டம் உதவுகிறது.

ஈரோடு மாவட்டத்தில், இத்திட்டத்தின்கீழ் ரூ. 1 கோடி மதிப்பில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில், பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் ரூ. 50 லட்சத்தில் சமுதாய வானொலி நிலையம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது' என்றார்.

இந்நிகழ்ச்சியில், கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வணிக விரிவாக்கத் துறைப் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி, மைராடா வேளாண் அறிவியல் நிலைய தோட்டக்கலை தொழில்நுட்ப அலுவலர் பச்சியப்பன், உழவியல் வல்லுநர் சரவணன் ஆகியோர் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

இதில், பவானிசாகர், தளாவாடி, சத்தி, அம்மாபேட்டை, அந்தியூர், நம்பியூர், தூக்கநாயக்கன்பாளையம், கோபி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டனர்.

அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

**தேயிலைக்கு ஒரே விலை, ஒரே ரகம் நிர்ணயிக்க நடவடிக்கை: தேயிலை வாரிய செயல் இயக்குநர்**

கோத்தகிரி, பிக்கமரட்டி கிராமத்தில் நடைபெற்ற தேயிலை தொடர்பான பயிற்சி முகாமில், ஒரே ரகப் பசுந்தேயிலை, ஒரே விலை நிர்ணயிக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தென்னிந்திய தேயிலை வாரிய புதிய செயல் இயக்குநர் பால்ராசு தெரிவித்தார்.

தேயிலை வாரியம் சார்பில் நடைபெற்ற இம்முகாமிற்கு, தேயிலை வாரிய கோத்தகிரி உதவி இயக்குநர் ஜார்ஜ் சாமுவேல் தலைமை வகித்தார். இணை இயக்குநர் ஹரிபிரசாத், தொழிற்சாலைகளின் ஆலோசகர் பாரதிராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊர்த் தலைவர் நஞ்சன் வரவேற்றார். விரிவாக்க அலுவலர் உமாமகேஷ்வரி திட்ட அறிக்கையை சமர்ப்பித்தார்.

செயல் இயக்குநர் பால்ராசு பேசியதாவது: தேயிலை வாரியம் மூலமாக அமல்படுத்தப்பட்டுள்ள 12-ஆவது 5-ஆவது திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சலுகைகளை சிறு விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விவசாயிகள் வாரியத்தில் உறுப்பினராகி அதற்கான உறுப்பினர் அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு உறுப்பினராக உள்ள விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்விக் கட்டணம் வழங்கப்படும்.

மேலும், விவசாயிகள் குழுக்கள் அமைத்து சில்வர் டிப் டீ, மைக்ரோ தேயிலைத் தொழிற்சாலைகள் அமைத்து ஆர்கானிக் டீ தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த குழுக்களுக்கு வாரியத்தின் மூலமாக மானியம் வழங்கப்படும். பசுந்தேயிலையைக் கொண்டு செல்ல வாகனங்கள் வாங்க மானியமும் வழங்கப்படும்.

பசுந்தேயிலைக்கு தேயிலைத் தொழிற்சாலைகள் ஏ,பி,சி என ரகம் பிரித்து விலை வழங்கி வருகின்றனர். இனி வரும் நாள்களில் ஒரே ரக இலைப் பறிக்கவும், அதற்கு ஒரே விலை நிர்ணயிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதில், விவசாயிகள் சங்கத் தலைவர் எ.பெள்ளி, தேயிலை வாரிய விரிவாக்க அலுவலர்கள் ஆனந்த்குமார், வருண்மேனன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## 21-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருகிற 21-ஆம் தேதி மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது. இந்தக் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தின் 5-ஆவது தளத்தில் ஆட்சியர் இரா.நந்தகோபால் தலைமையில் காலை 10.30 மணியளவில் நடைபெறுகிறது.

**சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.85 கோடி கடன் அளிப்பு**

திருவண்ணாமலை மாவட்ட சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ. 125 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, இதுவரை ரூ.85 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது என்று தமிழக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் பேசினார்.

திருவண்ணாமலை நகராட்சியைச் சேர்ந்த 18, 26 வார்டுகளில் அரசின் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவில் 3,097 பயனாளிகளுக்கு விலையில்லாப் பொருள்களை வழங்கி அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் பேசியது:

அதிமுக ஆட்சியில் எவ்வித பாகுபாடும் இல்லாமல் அனைவருக்கும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. மக்கள் சமூகத்துக்காக உழைக்கும் காவலராக முதல்வர் ஜெயலலிதா திகழ்கிறார்.

திருவண்ணாமலை மாவட்ட சிறு, குறு விவசாயிகள் நலன் கருதி ரூ.125 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, இதுவரை ரூ.85 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. முதல்வர் ஜெயலலிதா, தேர்தல் நேரத்தில் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும், முழுமையாக நிறைவேற்றி வருகிறார் என்றார் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன்.

விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார். சிறப்பு செயலாக்கத் திட்ட தனித் துணை ஆட்சியர் ராணி முன்னிலை வகித்தார். நகராட்சி ஆணையர் அ.சுல்தானா வரவேற்றார்.

மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எம்.எஸ்.நைனாகண்ணு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.வனரோஜா, கீழ்பென்னாத்தூர் எம்எல்ஏ ஏ.கே.அரங்கநாதன், மாவட்ட எம்ஜிஆர் மன்றச் செயலாளர் எஸ்.ஆர்.தருமலிங்கம், மாவட்ட ஜெயலலிதா பேரவைச் செயலாளர் பெருமாள் நகர் கே.ராஜன், நகர்மன்றத் தலைவர் என்.பாலசந்தர், வட்டாட்சியர் முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நாமகிரிப்பேட்டையில் ரூ.50 லட்சம் மஞ்சள் ஏலம்**

நாமகிரிப்பேட்டையில் வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் 1,315 மூட்டைகள் ரூ.50 லட்சத்துக்கு ஏலம் போனது.

நாமகிரிப்பேட்டை, வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் மஞ்சள் ஏலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல், சுற்றுப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் 1,315 மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டுவந்தனர்.

இதில், ஒரு குவிண்டால் விரலி ரூ.6,589-முதல் ரூ.8,822 வரையும், உருண்டை ரகம் ரூ.5,319 முதல் ரூ.7,389 வரையும், பனங்காலி ரகம் ரூ.9,009 முதல், ரூ.16,800 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் 1,315 மஞ்சள் மூட்டைகள் ரூ.50 லட்சத்துக்கு ஏலம் போனது.

**மயில்களால் சேதம்: பயிரைப் பாதுகாக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

ராசிபுரம் அருகே, வெண்ணந்தூரில் விளைநிலங்களில் மேயும் மயில்கள்களால் பயிர்கள் சேதமடைவதைத் தடுக்க வனத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தினர்.

ராசிபுரம் அருகே, வெண்ணந்தூர், கல்கட்டானூர், பழந்தின்னிபட்டி, மின்னக்கல் உள்ளிட்ட சுற்றுப் பகுதி கிராமங்களில் மிளகாய், தக்காளி, சோளம், நெல், பச்சைபயிறு உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் அதிகளவு சாகுபடி செய்துள்ளனர்.

இந்த நிலையில், இப் பகுதி விளைநிலங்களில் அதிக அளவில் மயில்கள் பயிர்களை மேய்கின்றன. இதனால், பயிர்கள் சேதமடைந்து விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். தற்போது, போதிய மழையில்லாமல் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மயில்கள் மேய்ந்து சேதப்படுத்துவதால், உற்பத்தி மேலும் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தேசியப்பறவை என்பதால், மயில்களை விவசாயிகள் விரட்டுவதில்லை.

இப் பகுதியில் மயில்களால் ஏற்படும் சேதத்தைத் தடுக்க உடனடியாக வனத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

**சம்பா பருவத்தில் இயந்திரங்கள் மூலம் 10600 ஹெக்டேர் நெல் நடவு செய்ய இலக்கு**

திருச்சி மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் நெல் இயக்கத்தின் கீழ் நடப்பு சம்பா பருவத்தில் 10,600 ஹெக்டேர் பரப்பில் நெல் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் வேளாண் இணை இயக்குநர் இரா.சந்திரசேகரன்.

திருச்சி வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று, மேலும் அவர் பேசியது:

மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில், நெல் நடவு இயந்திரங்கள் வைத்துள்ள உரிமையாளர்கள்-நடவு இயந்திரங்கள் இருப்பிலுள்ள குழுக்கள் விவசாயிகள் இடையே ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி, ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

நெல் நடவு இயந்திரத்தை பராமரிப்பது, அதை பழுது நீக்கம் மற்றும் உதிரிப் பாகங்கள் கொள்முதல் தேவை பற்றி இரு தரப்பினரும் முழுமையாக தெரிந்து வைத்திருக்க வேண்டும்.மேலும், வாடகைக்கு நெல் நடவு இயந்திரங்கள் விவசாயப் பயன்பாட்டுக்காக வழங்கப்படுவதால்

அதுகுறித்த விவரங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றார் அவர்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) ஆர். பாண்டியராசன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள், நெல் நடவு இயந்திரங்கள் உரிமையாளர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

**"தென்னை, ரப்பர் தோட்டங்களில் ஊடுபயிராக மக்காச்சோளம் சாகுபடி செய்யலாம்'**

மேல்புறம் வட்டாரப் பகுதிகளில் புதிதாக நடப்பட்ட தென்னை, ரப்பர் தோட்டங்களில் ஊடுபயிராக மக்காச்சோளம் சாகுபடி செய்து விவசாயிகள் கூடுதல் லாபம் பெறலாம் என வட்டார வேளாண்மை விரிவாக்க மைய உதவி இயக்குநர் என். தமிழ்க்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தென்னை மற்றும் ரப்பர், வாழை பயிர் செய்துள்ள தோட்டங்களில் ஊடுபயிர் சாகுபடி செய்யும்போது அவற்றால் பாதிப்பு இல்லாத பயிரை தேர்வு செய்ய வேண்டும். மூன்று மாதங்களில் அறுவடைக்கு வரும் மக்காச்சோளம் பயிரின் வேர் மிகவும் குறைவான ஆழத்துக்கு மண்ணில் வளர்வதால் நீண்ட வேர்களை கொண்ட தென்னை, ரப்பர் பயிருடன் மண்ணின் சத்துக்களுக்கும், பாசன நீருக்கும் போட்டி போடாமல் மக்காச்சோளம் வளரும்.

இயற்கையாகவே நோய் எதிர்ப்பு சக்தி கொண்டுள்ள மக்காச்சோளம் ஊடுபயிராக ஏக்கருக்கு 3 டன் மகசூல் தரக்கூடியது. அதிக புரோட்டீன், வைட்டமின் ஏ, மற்றும் வைட்டமின் சி சத்துக்களை கொண்ட மக்காச்சோளம் கதிர்களை நேரடியாக உணவாக பயன்படுத்தலாம். ஊடுபயிராக சாகுபடி செய்யும் போது தென்னை, ரப்பருக்கு இடையே 60 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைத்தோ அல்லது மண் குவியல்களிலோ அவற்றை விதைப்பு செய்ய வேண்டும். பார்கள் அமைக்கும் போது அடி உரமாக தொழுஉரம் இடுவது நல்லது. தொழுஉரத்துடன் அசோஸ் பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் உரங்களை கலந்து நிழலில் ஒருவாரம் வைத்திருந்து பின்பு மண்ணோடு சேர்த்தால் அசோஸ் பைரில்லம் தழைச்சத்தையும், பாஸ்போ பாக்டீரியா மணிச்சத்தையும் பயிருக்கு அதிகளவில் கிடைக்கச் செய்யும். செடிகளுக்கு இடையே 25 செ.மீ. இடைவெளியில் பாருக்கு பார் 60 செ.மீ. இடைவெளியிலும் விதைகளை 4 செ.மீ. ஆழத்தில் ஒரு குழியில் இரண்டு விதைகள் விதைப்பது நல்லது. மக்காச்சோளப் பயிரில் ஆண் பூக்கள் மற்றும் பெண் பூக்கள் தனித்தனியாக தோன்றும். பெண் பூக்கள் தோன்றி வளரும் காலத்தில் பயிருக்கு தண்ணீர் தேவை அதிகம். எனவே, மழை பெய்யும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் விதைப்பது நல்ல பலனை கொடுக்கும். மேல்புறம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வீரிய ஒட்டு ர

**வேளாண் கருவிகளுக்கு மானியம்: ஆட்சியர்**

கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக நெல் விவசாயத்துக்குப் பயன்படும் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: குமரி மாவட்ட விவசாயிகளுக்கு நான்கு வரிசைகள் மற்றும் எட்டு வரிசைகளும், அதற்கு மேலும் கொண்ட நெல் நாற்று நடும் இயந்திரங்கள், நெல் விதைக்கும் கருவிகள் மானியத்தில் வழங்கப்படவுள்ளன. நான்கு வரிசைகள் கொண்ட நெல் நாற்று நடும் இயந்திரங்களுக்கு மகளிர், சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு இயந்திரத்தின் விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.94,000, இதர விவசாயிகளுக்கு இயந்திரத்தின் விலையில் 40 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.75,000 மானியமாக வழங்கப்படும்.எட்டு வரிசைகள் அதற்கு மேலும் கொண்ட நெல் நாற்று நடும் இயந்திரங்களுக்கு மகளிர், சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு இயந்திரத்தின் விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.2 லட்சம், இதர விவசாயிகளுக்கு இயந்திரத்தின் விலையில் 40 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 2 லட்சம் மானியமாக வழங்கப்படும்.நெல் விதைக்கும் கருவிகளுக்கு மகளிர் சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு

இயந்திரத்தின் விலையில் 50 சதவீதம் அல்லது அதிக பட்சமாக ரூ.44,000 இதர விவசாயிகளுக்கு இயந்திரத்தின் விலையில் 40 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.35,000 மானியமாக வழங்கப்படும்.

நெல் நாற்று நடும் இயந்திரம் மற்றும் நெல் விதைக்கும் கருவிகளை மானியத்தில் வாங்கி பயன்பெற விரும்பும் அகஸ்தீசுவரம் மற்றும் தோவாளை வட்டார விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வே.பொ), 833 தொழிற்பேட்டை, கோணம், நாகர்கோவில் அலுவலகத்தையும் கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டார விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) 22,31 யு மேட்டுகடை, பள்ளிவாசல் சமீபம், தக்கலை அலுவலகத்தையும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் என்றார் அவர்.

**கால்நடைத் துறை பணியாளர்களுக்கு ஆளுமைத் திறன் பயிற்சி**

புதுவையில் கால்நடைத் துறை ஊழியர்களுக்கு ஆளுமைத்திறன் வளர்ப்பு பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

புதுவை கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடைத் துறையும், ஹைதராபாத்தில் உள்ள மத்திய அரசின் தென்மண்டல விரிவாக்கக் கல்வி நிறுவனம் இணைந்து புதுவை கால்நடைத் துறை தலைமை அலுவலகத்தில் நடத்திய இம்முகாமுக்கு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் பத்மநாபன் தலைமை வகித்தார்.

தென்மண்டல விரிவாக்கக் கல்வி மையத்தின் இயக்குநர் சூரியாமணி தொடங்கி வைத்தார். மையத்தின் பேராசிரியர் டாக்டர் மதுபாபு விளக்கிப் பேசினார்.

தொடர்ந்து 4 நாள்கள் நடைபெற உள்ள இம்முகாமில், விவசாயம் மற்றும் கால்நடைத்துறையில் பணியில் உள்ள களப்பணியாளர்கள் திறம்பட பணியாற்ற மென்திறன் சார்ந்த பயிற்சியளிக்கப்படுகிறது. கால்நடைத்துறை இணை இயக்குநர் ராஜ்மோகன் நன்றி கூறினார்.

தினகரன்

**கேரளா திடீர் கெடுபிடி காய்கறி தடையை தொடர்ந்து பாலுக்கும் வந்தது சோதனை**




கூடலூர்: தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு தினமும் லட்சக்கணக்கான

லிட்டர் பால் கொண்டு செல்லப்படுகிறது. கேரளாவில் ஓணம் பண்டிகையை (ஆக. 28) முன்னிட்டு தமிழகத்திலிருந்து வழக்கத்திற்கு அதிகமான அளவு பால் அனுப்பி வைக்கப்படுகிறது. இதில் கலப்படம் இருப்பதாகக் கூறி ஆய்வு நடத்த, கேரள அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து எல்லைப்பகுதிகளான குமுளி, பாலக்காடு, களியக்காவிளை உட்பட ஆறு இடங்களில் பால் வண்டிகளை, கேரள உணவு பாதுகாப்பு அமலாக்கப் பிரிவினர் சோதனை

செய்து வருகின்றனர். இதற்காக எல்லைப்பகுதி சோதனைச்சாவடிகளில் தற்காலிக ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது. ஓணம் பண்டிகை முடியும் வரை பால் கலப்படம் தொடர்பான ஆய்வு தொடர்ந்து நடத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் இருந்து வரும் காய்கறிகளைத் தொடர்ந்து தற்போது பாலுக்கும் கேரள அரசு ‘செக்’ வைத்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



மேட்டூர்: கர்நாடக மாநிலம், காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் கர்நாடக அணைகளில் இருந்து நீர்திறப்பு படிப்படியாக அதிகரிக்கப்படுகிறது. இதனால்மேட்டூர் அணைக்கு நீர்வரத்து உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் வினாடிக்கு 10,141 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று 10,545 கனஅடியாக அதிகரித்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு, வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. நேற்று முன்தினம் 91.40 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 91.20 அடியாக சரிந்தது.

**தேயிலை தூள் விலை சரிவு**




குன்னூர் : குன்னூர் டீ டிரேடர்ஸ் அசோசியேசன் (சிடிடிஏ) தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 33வது ஏலம் நடந்தது. இதில் மொத்தம் 17.43 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை

ரகம் 12.80 லட்சமும். டஸ்ட் ரகம் 4.63 லட்சமும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கேற்று தரமான தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்ததால் 74 சதவீத தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது.தேயிலை தூளுக்கு தேவை குறைந்து இருந்ததால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.1 வரை விலை குறைந்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ.203, ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.255 விலை வழங்கப்பட்டது. அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நடக்கிறது. இதில் 16.18 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

**தினமும் 60 ஆயிரம் யூனிட் மின் உற்பத்தி சூரிய ஒளியில் இயங்கும் கொச்சி விமான நிலையம்**




திருவனந்தபுரம் : இந்தியாவிலேயே முழுக்க முழுக்க சூரிய ஒளியில் இயங்கும் முதல் விமான நிலையம் என்ற பெருமை கொச்சி விமான

நிலையத்திற்கு கிடைத்துள்ளது. கேரள மாநிலம் கொச்சியில் சர்வதேச விமான நிலையம் உள்ளது. இங்கிருந்து பல்வேறு நாடுகளுக்கு தினமும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்த விமான நிலையத்தில் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் கடந்த 6 மாதத்திற்கு முன் தொடங்கப்பட்டது. ரூ.62 கோடி செலவில் ஜெர்மன் நாட்டை சேர்ந்த ஒரு நிறுவனம் இதற்கான பணிகளை மேற்கொண்டது. இதற்காக விமான நிலையத்தை ஒட்டியுள்ள 45 ஏக்கர் நிலத்தில் 46 ஆயிரத்து 150 சூரிய ஒளித்தகடுகள் பொருத்தப்பட்டன. இந்த பணிகள் கடந்த வாரம் முடிவடைந்தன. இந்நிலையில் இதன் தொடக்க விழா நேற்று நடந்தது.

இந்த சூரிய ஒளி மின் திட்டத்தை முதல்வர் உம்மன்சாண்டி தொடங்கி வைத்தார். இதன்மூலம் தினமும் 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் யூனிட்டுகள் வரை மின்சாரம் தயாரிக்க முடியும். கொச்சி விமான நிலையத்திற்கு தினமும் 50 ஆயிரம் யூனிட்டுகள் வரை மின்சாரம் தேவைப்படும். உபரியான மின்சாரம் கேரள மின்வாரியத்திற்கு வழங்கப்படுகிறது. கொச்சியில் நேற்று நடந்த சூரிய ஒளி மின் திட்ட ொதாடக்க விழாவில் விமான நிலைய இயக்குனர் வி.ஜெ.குரியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.


பூக்களின் விலை அதிரடி வீழ்ச்சி: மல்லிகை ஒரு கிலோ ரூ.170



ஆரல்வாய்மொழி: தேவாளை பூ சந்தைக்கு குமரி மாவட்டம் மற்றும் தமிழகத்தில் பல பகுதி, கேரளா உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் பூக்கள் விற்பனைக்கு வருகிறது. கடந்த ஆறு மாதங்களில் கோயில் திருவிழாக்கள் இருந்த காரணத்தால் பூக்களின் விலை ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது. இதுபோன்று கேரளாவில் சிங்ங மாதம் (தமிழில் ஆவணி) பிறந்ததால் நேற்று முன்தினம் பூக்களின் விலை கடுமையாக உயர்ந்து காணப்பட்டது. இந்நிலையில் நேற்று பூக்களின் விலை வீழ்ச்சியடைந்தது. ஒரு கிலோ ரூ.250 ஆக இருந்த மல்லிகைப் பூ ரூ.170 ஆக குறைந்திருந்தது. பிச்சி ரூ.700ல் இருந்து ரூ.200 ஆகவும், சேலம் அரளி ரூ.80ல் இருந்து ரூ.40 ஆகவும், தோவாளை அரளி ரூ.160ல் இருந்து ரூ.60 ஆகவும், மஞ்சள் கேந்தி ரூ.60ல் இருந்து ரூ.50 ஆகவும், ஆரஞ்சு கேந்தி ரூ.60ல் இருந்து ரூ.40 ஆகவும் குறைந்து இருந்தது. ஸ்டெம்ப் ரோஸ் ஒரு கட்டு ரூ.200ல் இருந்து ரூ.100 ஆகவும், பட்டன்

ரோஸ் ரூ.160ல் இருந்து- ரூ.120 ஆகவும், பாக்கெட் ரோஸ் ரூ.70ல் இருந்து ரூ.40 ஆகவும், சம்மங்கி ரூ.100ல் இருந்து ரூ. 70 ஆகவும், கொழுந்து ரூ.150ல் இருந்து ரூ.100 ஆகவும், மரிக்கொழுந்து ரூ.200ல் இருந்து ரூ.150 ஆகவும், கோழிப்பூ ரூ.60ல் இருந்து ரூ.50 ஆகவும், கனகாம்பரம் ரூ.800ல் இருந்து ரூ.500 ஆகவும் குறைந்திருந்தது.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 20 பைசா குறைந்தது**




நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 20 பைசா குறைந்துள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், முட்டை விலையில் 20 பைசா குறைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 322 பைசாவாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை குறைவு, தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை சரிவு போன்ற காரணங்களால்

விலை குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.67, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.75 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விபரம் (பைசாவில்) வருமாறு: பெங்களூரு- 350, மைசூர்- 357, ஐதராபாத்- 305, மும்பை- 345, விஜயவாடா- 300, டெல்லி- 315.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**தென்னை மரங்களை தாக்கும் காண்டாமிருக வண்டுகள்**



ஆனைமலை,

காண்டாமிருக வண்டு தாக்குதலில் இருந்து தென்னை மரங்களை காப்பாற்றும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள்.

காண்டாமிருக வண்டுகள்ஆனைமலை வட்டார பகுதியில் தென்னை சாகுபடி அதிகளவில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் தென்னை மர கன்றுகளை காண்டாமிருக வண்டு என்ற பூச்சி தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. வண்டு தாக்குதலுக்குள்ளான மரக்கன்றுகள் சில நாட்களில் பட்டு போய் விடுகின்றன. மேலும் தென்னை மரங்களின் குருத்துக்களையும் தாக்கி அழிக்கும் காண்டாமிருக வண்டுகள் விவசாயிகளுக்கு பொருளாதார அளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. இதை கட்டுப்படுத்த வேரில் ரசாயன வீரிய மருந்துகள் கட்டும் முறை உள்ளது. இதனால் பக்க விளைவுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் காண்டாமிருக வண்டுகளை கட்டுப்படுத்தி, மரங்களை காப்பாற்றும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். காப்பாற்றும் முயற்சிஇது குறித்து விவசாயிகள் கூறியதாவது:- தென்னை மரக்கன்றுகளை தாக்கும் காண்டாமிருக வண்டுகள் 2 நாட்களில் இளம் குருத்தை கடித்து தென்னங்கன்றுகளை அழித்து விடுகின்றன. தினமும் தோப்புகளில் காண்டாமிருக வண்டு உள்ளிட்ட பூச்சிகள் தாக்குதல் உள்ளதா? என்று கண்காணிக்க வேண்டும்.

அவ்வாறு தாக்குதல் தெரிந்தால், சிறிய கன்றுகளில் சலித்த மணலுடன் வேப்பம் புண்ணாக்கு கலந்து குருத்து வழியே உள்ளே செலுத்தி வருகிறோம். இதன் மூலம் இயற்கை முறையில் காண்டாமிருக வண்டுகள் தாக்குதலை தடுத்து, தென்னங்கன்றுகளை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம்.இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## போதிய மழை இல்லாததால் சிறுவாணியிலிருந்து எடுக்கப்படும் குடிநீரின் அளவு குறைப்பு

கோவை,

சிறுவாணி பகுதியில் போதிய மழை பெய்யாததால், அணையிலிருந்து எடுக்கப்படும் குடிநீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

மழை இல்லை

கோவையின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணிக்கு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை மூலம் மழை கிடைக்கிறது. கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தாமதமாக அதாவது ஜூன் 3–வது வாரம் முதல் தான் தொடங்கியது. கடந்த ஜூலை மாதம் இறுதி வரை சிறுவாணி அணையின் நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்ததால் சிறுவாணியின் நீர்மட்டம் கிடு கிடு வென்று உயர்ந்தது.

ஆனால் அதன் பின்னர் சிறுவாணியில் மழை பெய்யாததால் நீர் மட்டம் குறைய தொடங்கி நேற்று 38 அடியாக இருந்தது. அணையின் மொத்த உயரம் 51 அடியாகும். அணையின் நீர்பிடிப்பு பகுதியில் நேற்று 3 மி.மீட்டர் மழை தான் பெய்தது. முன்பு மழை தொடர்ந்து பெய்த போது அணையிலிருந்து தினமும் 11 கோடி லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டு சப்ளை செய்யப்பட்டது. ஆனால் தற்போது போதிய மழை பெய்யாததால், தினமும் 8½ கோடி லிட்டராக குறைக்கப்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால் வீடுகளுக்கு சப்ளை செய்யப்படும் குடிநீரின் அளவும் குறையும் என்று தெரிகிறது.

<u>வடகிழக்கு பருவமழை</u>

கடந்த 16–ந் தேதி சிறுவாணி அணையின் கீழே உள்ள கோவை குற்றாலம் பகுதியில் திடீர் மழை பெய்து காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆனால் சிறுவாணியில் மழை பெய்யவில்லை.

தென்மேற்கு பருவமழை இந்த மாதம் வரை நீடிக்கும். அப்போதும் எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லையென்றால் அடுத்து வடகிழக்கு பருவமழையை தான் நம்ப வேண்டியிருக்கும். அப்போது போதிய அளவு மழை பெய்தால் அணை நிரம்ப வாய்ப்பு உள்ளது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறினார்கள்.

**கடைமடை பாசன பகுதிக்கு கூடுதலாக தண்ணீர் திறந்து விட வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**

சம்பா சாகுபடியை காப்பாற்ற கடைமடை பாசன பகுதிக்கு கூடுதலாக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்ஏற்பாடு பணிகள்

வேதாரண்யம் தாலுகா கடைமடை பாசன பகுதிக்கு கடந்த 9-ந்தேதி மேட்டூரில் இருந்து திறக்கப்பட்ட காவிரி தண்ணீர் நேற்று வந்தடைந்தது. வேதாரண்யம் தாலுகா கடைமடை பாசன பகுதியான தலைஞாயிறு, மணக்குடி, கரியாபட்டினம், பிராந்தியங்கரை, அண்டகத்துறை, தாணிக்கோட்டகம், வடமழை, மணக்காடு ஆகிய பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி முன்ஏற்பாடு பணிகள் செய்யப்பட்டு உள்ளன. மேட்டூரிலிருந்து திறக்கப்¢பட்ட தண்ணீரை நம்பி விவசாயிகள் தீவிரமாக விவசாய பணியில் ஈடுபட்டு உழவு, உரமிடுதல், நாற்றாங்கால் வளர்த்து நடவு பணிக்கு தயாராக உள்ளனர். ஆனால் கடைமடை பகுதி ஆறுகளான முள்ளியாறு, அரிச்சந்திரா நதியில் குறைந்தளவே தண்ணீர் வருகிறது. எனவே நடவு செய்ய முடியாமல் விவசாயிகள் அவதிபடுகின்றனர். தண்ணீர் வராததற்கு ஆறுகள் தூர்வாரப்படாததே காரணம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மேலும் குறைந்தளவே தண்ணீர் வருவதால் விவசாயத்திற்கு போதுமானதாக இல்லை.

கூடுதல் தண்ணீர்எனவே விவசாயிகள் தங்கள் நடவு பணிக்கு வாய்க்காலில் வரும் சிறிதளவு தண்ணீரை என்ஜீன் வைத்து இறைத்து சாகுபடி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் சாகுபடிக்கு கூடுதலாக செலவு ஆகிறது. எனவே இப்பகுதியில் ஒருபோகம் சம்பா சாகுபடியை காப்பாற்ற கடைமடை பாசனபகுதிக்கு கூடுதலாக தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**டெல்லிக்கு ஏற்றுமதியாகும் திண்டுக்கல் வாழை இலைகள்**



திண்டுக்கல்,

திண்டுக்கல்லில் இருந்து வாழை இலைகள் டெல்லிக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

திண்டுக்கல் வாழை இலை

மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளின் பிறப்பிடமாக திண்டுக்கல் மாவட்டம் திகழ்கிறது. இதில் 3–ம் கனியான வாழை என்றவுடன், திண்டுக்கல் அருகே உள்ள சிறுமலை தான் நினைவுக்கு வரும். அந்த அளவுக்கு, சிறுமலை வாழைப்பழம் பிரபலமானதாக விளங்குகிறது. வாழைப்பழம் மட்டுமின்றி, வாழை இலைக்கும் திண்டுக்கல் பிரசித்தி பெற்றதாகும். திண்டுக்கல்லில் இருந்து வாழை இலைகள் புதுடெல்லிக்கும் 40 ஆண்டுகளாக அனுப்பி வைக்கப்படுகின்றன என்பது கூடுதல் சிறப்பு.

பிரியாணி பட்டியலில்...

பூட்டு, பிரியாணி, ஜிலேபி, சிறுமலை வாழைப்பழம் என்ற சிறப்பு பட்டியலில் திண்டுக்கல் வாழை இலையும் அடைக்கலம் புகுந்துள்ளது. டெல்லியின் அண்டை மாநிலங்களான உத்தரபிரதேசம், அரியானா மாநிலங்களில் வாழை இலைகள் கிடைக்கின்றன. ஆனால் அந்த இலைக்கும், திண்டுக்கல் வாழை இலைக்கும் வித்தியாசம் உள்ளது.

திண்டுக்கல் வாழை இலையையே டெல்லி நகரவாசிகள் விரும்பி வாங்குகிறார்கள். இதற்காக ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், ஆத்தூர், ஸ்ரீராமபுரம், சின்னாளப்பட்டி, காந்திகிராமம், திண்டுக்கல் மற்றும் திண்டுக்கல்லின் சுற்று வட்டாரங்களில் இருந்து வாழை இலைகள்

சேகரிக்கப்படுகின்றன. ஒன்றன்பின் ஒன்றாக 5 இலைகள் வீதம் அடுக்கப்படுகின்றன. 50 அடுக்களை கொண்ட 250 இலைகள் ஒரு கட்டாக கட்டப்படுகின்றன. பின்னர் திண்டுக்கல் ரெயில் நிலையத்துக்கு இலை கட்டுகள் கொண்டு வரப்பட்டு ரெயில் மூலம் டெல்லிக்கு அனுப்பப்படுகிறது.

<u>வாரத்தின் 4 நாட்கள் பயணம்</u>

ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன், வெள்ளி, சனி ஆகிய 4 நாட்கள் திண்டுக்கல்லில் இருந்து ரெயில் மூலம் டெல்லிக்கு வாழை இலை பயணிப்பதை பார்க்கலாம். டெல்லி போய் இலைகள் சேருவதற்கு 2 நாட்கள் ஆகிவிடும். சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப இலைகள் தன்மை மாறுபடும். அதாவது கோடைகாலம் என்றால், சில இலைகள் பழுப்பு நிறமாக மாறி விடும்.

ஆனால் மழைக்காலம், பனிக்காலத்தில் இலைகளின் நிறம் மாறாமல் பச்சையாகவே இருக்கும். டெல்லி போய் சேர்ந்த இலைகள் அங்குள்ள கரோல் பார்க்கில் உள்ள எம்.ஜி.ஆர். மார்க்கெட்டுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. பின்னர் அங்கு இலைகள் தரம் பிரிக்கப்படுகின்றன. பழுப்பு நிறத்தினால் இலைகள் கழிக்கப்படுகிறது. ஏனெனில், அந்த இலைகளில் உணவு சாப்பிடுவதற்கு டெல்லி நகரவாசிகள் விரும்புவதில்லை. பச்சை நிறத்திலான இலைகளையே விரும்பி வாங்குகின்றனர்.

தலை வாழை இலையாக போய் சேருகிற இலைகள் சாப்பிடுவதற்கு ஏற்றாற்போல தயார் செய்யப்படுகிறது. வட்டம், சதுரம் வடிவில் இலைகள் வெட்டப்படுகின்றன. பின்னர் அங்குள்ள தென்னிந்திய உணவு விடுதிகள், டெல்லி ஓட்டல்கள், குடும்ப நிகழ்ச்சிகள், திருவிழாக்களை நடத்துவோர் ஆர்வமுடன் வாங்கி செல்கிறார்கள். ஒரு இலை ரூ.5 முதல் 15 வரை விற்பனை செய்யப்படுகிறது.

நாட்டு வாழைமரத்தில் இருந்து கிடைக்கிற இலைகள் எளிதில் பழுப்பு நிறமாக மாறுவதில்லை. இதனால் அந்த வாழைமரத்தில் இருந்து மட்டுமே இலைகள் சேகரிக்கப்படுகின்றன. திண்டுக்கல் வாழை இலைக்கு டெல்லியில் நல்ல வரவேற்பு உள்ளது. இதனால் இலைகளின் தேவை அதிகமாகி விட்டது. கூடுதல் விலை கொடுத்து வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.

இதுதொடர்பாக டெல்லியில் வாழை இலை வியாபாரம் செய்கிற சின்னாளப்பட்டியை சேர்ந்த வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

தமிழகத்தில் திண்டுக்கல்லில் இருந்து தான் டெல்லிக்கு வாழை இலை அனுப்பப்படுகிறது. என்னுடைய தந்தை காலம் முதல் சுமார் 40 ஆண்டுகளாக இந்த தொழிலை செய்து வருகிறோம். திண்டுக்கல் வாழை இலைக்கு டெல்லியில் கடும் கிராக்கி உள்ளது. ஆனால் இலைகளின் நிறத்தை பொறுத்தே இந்த தொழிலில் வருமானம் நிர்ணயிக்கப்படுகிறது.

பழுப்பு நிறத்தில இலைகள் மாறி விட்டால் குறைந்த லாபமும், பச்சை நிறமாக இருந்தால் அதிக வருமானமும் கிடைக்கும்.

பிற வியாபாரத்தை போல, இதில் நிலையான வருமானம் கிடைப்பதில்லை. வாழை இலை மட்டுமின்றி முருங்கைக்காய், வெங்காயம், சிறுகிழங்கு, சவ் சவ் போன்ற காய்கறிகளும் டெல்லிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பாராளுமன்ற கேண்டீனுக்கும், திண்டுக்கல் வாழை இலை விற்பனை செய்து வருகிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**நாமகிரிப்பேட்டையில் ரூ.50 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்**



நாமகிரிப்பேட்டையில் 1,315 மஞ்சள் மூட்டைகள் ரூ.50 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. விலை குறைந்து ஏலம் போனதால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.மஞ்சள் ஏலம் நாமகிரிப்பேட்டையில் உள்ள ராசிபுரம் தாலுகா கூட்டுறவு உற்பத்தியாளர் மற்றும் விற்பனை சங்க கிளை வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. வழக்கம்போல் நேற்று ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி, புதுப்பட்டி, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்வதற்காக கொண்டு வந்திருந்தனர். இந்த ஏலத்தில் மஞ்சளை ஏலம் எடுப்பதற்காக சேலம், ஈரோடு, நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி உள்பட பல பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்து மஞ்சளை ஏலம் எடுத்தனர்.ரூ.50 லட்சத்திற்கு ஏலம் இந்த ஏலத்தில் விரலி ரகம் 1000 மூட்டைகளும், உருண்டை ரகம் 300 மூட்டைகளும், பனங்காளி ரகம் 15 மூட்டைகளும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் 6,589-க்கும், அதிகபட்சமாக ரூ.8,822-க்கும், உருண்டை ரகம் ஒரு குவிண்டால் குறைந்தபட்சம் ரூ.5,319-க்கும், அதிகபட்சமாக ரூ.7,389-க்கும், பனங்காளி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.9,009-க்கும், அதிகபட்சமாக ரூ.16,800-க்கும் ஏலம் போனது. இந்த ஏலத்தில்

மொத்தமாக 1,315 மஞ்சள் மூட்டைகள் ரூ.50 லட்சத்திற்கு ஏலம் போனதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த வாரம் 2,300 மஞ்சள் மூட்டைகள் ரூ.95 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. ஆனால் இந்த வாரம் 1,315 மூட்டைகளே ஏலத்திற்கு வந்திருந்தது. அதே நேரத்தில் ஏலமும் 1 குவிண்டால் மஞ்சள் சுமார் ரூ.300 முதல் ரூ.500 வரை விலை குறைவாக போனது. இந்த விலை குறைவால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

**வைகை அணையில் 10 லட்சம் மீன் குஞ்சுகள் விடும் பணி சிறிய துளைகளுடைய வலைகள் பயன்படுத்த தடை**



ஆண்டிப்பட்டி

வைகை அணையில் மீன்வளத்தை பெருக்கும் வகையில் 10 லட்சம் மீன் குஞ்சுகள் வளர்ப்புக்கு விடும் பணி தொடங்கியது. மீன்கள் நன்கு வளரும்

வரையில் சிறிய துளைகளுடைய வலைகளை பயன்படுத்த மீனவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

<u>10 லட்சம் மீன்குஞ்சுகள்</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணையில் மீன்பிடி தொழில் நடைபெற்று வருகிறது. வைகை அணை புதூர், காமாக்காப்பட்டி, பெருமாள் கோவில்பட்டி, கரட்டுப்பட்டி பகுதியை சேர்ந்த 120 பேர் மீனவர் சங்க அலுவலகத்தில் பதிவு செய்து வைகை அணையில் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு பரிசல் படகுக்கு 2 பேர் வீதம் 60 பரிசல்களில் சென்று மீன் பிடித்து வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் மீன்வளத்துறை மூலம் வளர்க்கப்பட்ட மீன்கள் வைகை அணை நீர்த்தேக்கத்திற்குள் விடப்படுகிறது. வைகை அணையில் மீன்வளத்தை பெருக்கும் வகையில் பவானிசாகர் அணை பகுதியில் இருந்து கட்லா, மிருகால், ரோகு ரகத்தை சேர்ந்த 10 லட்சம் மீன்குஞ்சுகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வைகை அணை மீன்வளத்துறை அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது.

<u>மீனவர்களுக்கு தடை</u>

தற்போது 60 நாட்கள் வளர்க்கப்பட்ட நிலையில் உள்ள மீன்குஞ்சுகளை வைகை அணையின் நீர்த்தேக்கத்தில் விடும் பணி நேற்று தொடங்கியது.

முதற்கட்டமாக கட்லா மற்றும் ரோகு ரகங்களை சேர்ந்த 1 லட்சத்து 30 ஆயிரம் மீன்குஞ்சுகள் வைகை அணையில் விடப்பட்டன. படிப்படியாக இனிவரும் நாட்களில் மீதமுள்ள 8 லட்சத்து 70 ஆயிரம் மீன்குஞ்சுகள் வைகை அணையில் விடப்படும்.

இந்த மீன் குஞ்சுகள் நன்கு வளரும் வகையில், மீனவர்கள் சிறிய துளைகளுடைய வலைகளை பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**தேனி பகுதியில் கத்தரிக்காய் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**



தேனி பகுதியில் கத்தரிக்காய் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

## கத்தரிக்காய் சாகுபடி

தேனி மாவட்டத்தில் நெல், கரும்பு உற்பத்திக்கு அடுத்தபடியாக காய்கறிகள் உற்பத்தி அதிக அளவில் நடந்து வருகிறது. தேனி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள குன்னூர், அம்மச்சியாபுரம், அரப்படித்தேவன்பட்டி, சொக்கத்தேவன்பட்டி, பின்னத்தேவன்பட்டி போன்ற பகுதிகளில் காய்கறி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதிகளில் கத்தரிக்காய், தக்காளி, பீன்ஸ், மிளகாய், முள்ளங்கி, முட்டைகோஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான காய்கறிகள் சாகுபடி நடந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளை விட இந்த ஆண்டு கத்தரிக்காய் சாகுபடியில் அதிக ஆர்வத்துடன் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர். கடந்த மாதம் நடவு செய்த கத்தரிக்காய் செடியில் தற்போது பிஞ்சு பிடித்து விளைச்சல் அடையத் தொடங்கி உள்ளன.

## விலை குறையும்

அரப்படித்தேவன்பட்டி பகுதியில் வைகை ஆற்றுக் கரையோர பகுதிகளில் சாகுபடி செய்துள்ள கத்தரிக்காய் செடிகள் விவசாயிகள் எதிர்பார்த்தது போன்று நல்ல வளர்ச்சி அடைந்து, அதிக அளவில் பூக்கள் பூத்துள்ளன. இதனால் பூக்கள் எல்லாம் பிஞ்சு பிடித்து, விளைச்சல் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக மருந்து தெளிக்கும் பணியிலும், களை எடுக்கும் பணியிலும் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு உள்ளனர்.

இன்னும் ஓரிரு நாட்களில் இங்கு கத்திரிக்காய் பறிக்கும் பணி தொடங்கும். தற்போது தேனி பகுதியில் ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.12 முதல் ரூ.16 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் கத்தரிக்காய் பறிக்கும் பணி தொடங்கினால் விலை குறையும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

**வெள்ளிமலைப் பகுதியில் தொடர் மழையால் வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது**



கடமலைக்குண்டு

வெள்ளிமலைப் பகுதியில் தொடர் மழையால் வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

குடிநீர் தட்டுப்பாடு

தேனி மாவட்டம் கடமலை–மயிலை ஒன்றியத்தில் கடந்த சில மாதங்களாக வெயில் அதிக அளவில் காணப்பட்டது. இதனால் வெள்ளிமலை, அரசரடி, வருசநாடு ஆகிய கிராமங்களை சுற்றியுள்ள வனப்பகுதியில் மரங்கள் அனைத்தும் காய்ந்த நிலையில் காணப்பட்டன.

மேலும் வனப்பகுதியில் அமைந்துள்ள சிறு சிறு ஓடைகளிலும் நீர் வற்றியது. இதனால் வனவிலங்குகளுக்கு குடிநீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டது. மேலும் மரங்கள் அனைத்தும் காய்ந்த நிலையில் இருந்ததால் காட்டு தீ பரவும் அபாயமும் காணப்பட்டது.

காட்டு தீ

கடந்த சில நாட்களுக்கு முன்பு வருசநாடு வனப்பகுதியில் சில இடங்களில் காட்டு தீ பரவியது. அந்த பகுதிகளில் வனத்துறையினர் முகாம் அமைத்து தீயை அணைத்தனர். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதேபோல கடமலை–மயிலை ஒன்றியத்தில் உள்ள மலைப்பகுதிகளில் காட்டு தீ பரவியது. இதில் ஏராளமான மரங்கள் தீயில் கருகின. மேலும் தற்போது கடமலை–மயிலை ஒன்றியத்தில் காற்று அதிக அளவில் வீசி வருகிறது. இதனால் காட்டு தீ விபத்து ஏற்பட்டால் அதிக காற்றினால் தீ வேகமாக பரவும் நிலை ஏற்பட்டது.

எனவே இந்த ஆண்டு காட்டு தீ விபத்து ஏற்படாமல் தடுப்பதற்காக வனத்துறையினர் முன்னெச்செரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு

வந்தனர். மேலும் வனப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தீ கண்காணிப்பு கோபுரங்களில் ஏறி வனப்பகுதியை தீவிரமாக கண்காணித்து வந்தனர். இருப்பினும் வனப்பகுதியில் மரங்கள் அனைத்தும் காய்ந்து இருந்ததால் மழை பெய்தால் மட்டுமே காட்டு தீ அபாயம் குறையும் நிலை இருந்தது.

நீர்வரத்து அதிகரிப்பு

இந்நிலையில் கடந்த 2 நாட்களாக கடமலை–மயிலை ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் திடீரென்று தொடர் சாரல் மழை பெய்தது. இதனால் கடந்த 2 மாதங்களாக வனப்பகுதியில் நிலவி வந்த காட்டு தீ அபாயம் நீங்கியது. மேலும் தொடர் மழையால் நேற்று வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்தது. இந்த தண்ணீர் அந்த பகுதியில் உள்ள வருசநாடு கிராமத்தை கடந்து சென்றது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**காவிரி கடைமடை பகுதியில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆய்வு**



பாசனத்திற்காக திறக்கப்பட்ட காவிரி நீர் காவிரி கடைமடைப் பகுதியான புதுக்கோட்டை மாவட்டத்தின் மும்பாலை பகுதிக்கு சென்றடைந்தது. கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் செல்வதில் ஏதேனும் இடையூறு உள்ளதா என்பதை ஆய்வு செய்வதற்காக பொதுப்பணித்துறை (கல்லணைக் கால்வாய் கோட்டம்) செயற்பொறியாளர் ரேவதி, உதவி செயற்பொறியாளர் அன்பரசன், நாகுடி உதவிப் பொறியாளர் தென்னரசு ஆகியோர் மும்பாலை வரை உள்ள அனைத்து ஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள், வரத்துவாரிகள், நீர்போக்கிகள் உள்ளிட்டவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

**உப்பாறு ஆற்றில் தடுப்பணை கட்ட வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**



உப்பாறு ஆற்றில் தடுப்பணை கட்ட வேண்டும் என்று தாராபுரத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

குறை தீர்ப்பு கூட்டம்

தாராபுரத்தில் விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம் ஆர்.டி.ஓ.அலுவலகத்தில் ஆர்.டி.ஓ.சரவணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தாசில்தார்கள் ஆறுமுகம், ராஜகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தாராபுரத்தில் உள்ள விவசாயிகள் கலந்துகொண்டு விடுத்த கோரிக்கைகள் விபரம் வருமாறு:–

பாசன பகுதிகளில் உள்ள சீமை கருவேல மரங்களை வேரோடு அகற்ற வேண்டும். வடுகபாளையத்திலிருந்து கோவில்பாளையம் செல்லும் வழியில் ஏராளமான கோழிக்கழிவுகள் கொட்டப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் தொற்றுநோய் பரவி வருகிறது. இந்த பகுதியில் அதிக அளவில் முருங்கை உற்பத்தி செய்யப்படுவதால், முருங்கை பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும். 100 சதவீத மானியம் அடிப்படையிலான சொட்டுநீர் பாசனத்திட்டத்தில், முன்பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க வேண்டும்.

<u>பாசனத்திற்கு தண்ணீர்</u>

குள்ளாய்பாளையம் அருகே மருத்துவக்கழிவுகளை தனியார் நிறுவனம் ஒன்று அனுமதி பெற்று எரித்து வருகிறது. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, பொது மக்கள்சிரமத்திற்கு உள்ளாகி வருகிறார்கள். எனவே தனியார் நிறுவனத்தின் அனுமதியை உடனடியாக ரத்துசெய்ய வேண்டும். வழக்கம் போல அமராவதி அணையிலிருந்து செப்டம்பர் 15–ந்தேதி பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட வேண்டும்.

பழைய ஆயக்கட்டுபாசன வாய்க்கால்கள் ஒப்பந்ததாரர்களால் தூர் வாரப்பட்டு வருகிறது. தூர்வாரி முடிந்ததும். அந்தந்த பாசன சங்கத்திடம் ஒப்புதல் கடிதம் பெறவேண்டும். மின்வாரிய அலுவலகத்தில் பெயர் மாற்றம் செய்வதற்கு சிறப்பு முகாம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பி.ஏ.பி.பாசன திட்டத்தில் சாகுபடியில் இல்லாத நிலங்களை பொதுப்பணித்துறையினர் கணக்கெடுப்பு செய்து அறிக்கை தந்துள்ளனர். இதை வருவாய்த்துறை ஆய்வு செய்து நீக்கப்பட்ட பாசன நிலங்களின் பரப்பளவை உறுதி செய்ய வேண்டும். நல்லதங்காள் தடுப்பணைக்கு உட்பட பாசன வாய்க்கால்களை சீரமைத்து காங்கிரீட் தளம் அமைக்க வேண்டும்.

<u>தடுப்பணை</u>

ராஜவாய்க்காலில் வெளியேறும் உபரி தண்ணீர் உப்பாறு ஆற்றில் கலந்து வீணாக வெளியேறி விடுகிறது. எனவே வடுகபாளையம் பகுதியில் உப்பாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகள் விவசாயிகள் சார்பில்

வைக்கப்பட்டது. கூட்டத்தில் ஆர்.டி.ஓ.சரவணமூர்த்தி பதில் அளித்து பேசியதாவது:–கோட்ட அளவில் நடைபெறும் இந்த குறைதீர்ப்பு கூட்டத்தில் கலந்து கொள்ளும் அதிகாரிகள், விவசாயிகளின் மனுக்களை பெற்றுக்கொண்டு மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. உடனுக்குடன் தீர்வு ஏற்படுத்தவேண்டும். அனைத்து கோரிக்கைகளுக்கும் அந்தந்த துறை மூலம் விரைவில் தீர்வுகாணப்படும் என்று கூறினார்.